தலைப்பு 116 – வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 116 - வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	உயர்கல்வி அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 40,000,000 பெறுமதியான வாகனமொன்றும், சனாதிபதிச் செயலகத்திற்குச் சொந்தமான பெறுமதி இனங்காணப்படாத வாகனமொன்றும் முறையே கடந்த வருடத்திலும் மீளாய்வாண்டிலும் அமைச்சிடம் கையளிக்கப் பட்டிருந்த போதிலும், அவை நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	சம்பந்தப்பட்ட வாகன இலக்கங்கள் பற்றிய விபரங்கள் வழங்கப்படுமாயின், போதுமான பதிலொன்றை வழங்க முடியும்.	அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள வாகனங்கள் சரியான பெறுமதியில் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.
(ii)	அமைச்சிற்குச் சொந்தமில்லாத, மொத்தப் பெறுமதியான ரூபா 51,000,000 ஆன மூன்று வாகனங்கள், நிதியியல் அல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக, அத்தொகையினால் சொத்துக்கள் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன.	இந்த மூன்று வாகனங்களில் இரண்டு வாகனங்கள் லங்கா சதொச நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அவ்வாகனங்களை சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	அமைச்சிற்குச் சொந்தமில்லாத வாகனங்களை கால தாமதமின்றி சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iii)	கடந்த ஆண்டில் அமைச்சருடன் இணைப்புச் செய்யப்பட்ட சர்வதேச வர்த்தக மேம்பாட்டுப் பிரிவின் (வணிகத் திணைக்களம்) சொத்துக்கள், 07 சொத்து தொகுதிகளுக்குச் சொந்தமான மொத்தப் பெறுமதி ரூபா 65,524,857 ஆன நிலையானச் சொத்துக்கள், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	வணிகத் திணைக்களத்திற்காக (சர்வதேச வர்த்தக மேம்படுத்தல் பிரிவு) 2024 ஆம் ஆண்டில் இந்தத் தலைப்பின் கீழ் ஏற்பாடுகள் வழங்கப்பட்டதுடன், அந்தத் திணைக்களம் நிதி அல்லாத சொத்துக்களை இந்த அமைச்சிடம் கையளிக்கவில்லை. 2025 ஆம் ஆண்டில் மீண்டும் 295 ஆம் தலைப்பின் கீழ் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதால், 2025 ஆம் ஆண்டில் இது நிவர்த்தி செய்யப்படும்.	அமைச்சிற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் சரியாகக் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டில் 18 பொருள் உருப்படிகள் இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்கும், கடந்த ஆண்டில் ரூபா 1,193,790 பெறுமதியான 99 உருப்படிகளும் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 50 உருப்படிகளும் என 149 அலுவலக உபகரண உருப்படிகள் 10 அரச நிறுவனங்களுக்கு அமைச்சிலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்படவில்லை.	அந்த அனைத்துப் பொருட்களும் CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படாத மேலதிகப் பொருட்கள் ஒரு மதிப்பீட்டுக் குழுவினால் பெறுமதியை மதிப்பிட்டதன் பின்னர் தற்போது CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.	அமைச்சிற்குச் சொந்தமான மற்றும் சொந்தமில்லாத சொத்துக்களைச் சரியாக இனங்கண்டு அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் அல்லது நீக்குதல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் 17 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகையான ரூபா 412,500,000 மொத்த நிதியேற்பாடு முழுவதும் மீதமாகியிருந்ததுடன், 21	நிலவிய அரசியல் நிலைமை காரணமாக சில மாதங்கள் அமைச்சு அலுவலகத்தின் பணிகள் நடைபெறாமை, அரசச் செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கைகளுக்கமைய செலவின முகாமைத்துவம்	செலவின மதிப்பீடுகளைக் கூடிய வரையில் சரியாகவும் உண்மைத்தன்மைக்கு இணங்கவும் தயாரிக்க வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட

	செலவின விடயங்களுக்காக ரூபா 375,700,000 ஆன மொத்த தேறிய ஏற்பாட்டில் ரூபா 193,218,401, அதாவது 50 முதல் 96 வரையான சதவீத வீச்சிலான ஏற்பாடுகள் மீதியாகியிருந்தன. அதற்கிணங்க, நிதிப் பிரமாணங்கள் 50 இற்கிணங்க மதிப்பீடுகள் கூடிய வரையில் பூரணமாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்கொள்ளப்பட்டமை மற்றும் வணிகத் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் ஏற்படாமையின் காரணமாக ஏற்பாடுகள் எஞ்சியுள்ளன.	மதிப்பீடுகளின் அடிப்படையில் கிடைத்த ஏற்பாடுகள் முழுமையாக உபயோகிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	08 செலவின விடயங்களுக்கான மொத்த ரூபா 181,500,000 ஏற்பாடுகளில், நி.பி. 66 இன் மூலம் ரூபா 23,630,000 இற்குரிய ஏற்பாடுகள் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டதன் பின், மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 157,870,000 ஆக இருந்தது. அதில், சம்பந்தப்பட்ட செலவுகளைச் செய்த பின்னரும் ரூபா 43,395,489 எஞ்சியிருந்ததுடன், அது அந்தச் செலவின விடயங்களின் மொத்த தேறிய ஏற்பாட்டில் 8 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டமையால் அதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது	புதிய அமைச்சின் பதவியணியின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக நி.பி. 66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. அதற்குரிய ஆவணங்கள் முறையாகக் கிடைக்கப்பெறாமையால் 2025 சனவரியில் நிலுவைப் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. அரச செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கைகளுக்கமைய செலவின முகாமைத்துவம், உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறை எடுத்தமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் ஏற்படாமையின் காரணமாக ஏற்பாடுகள் எஞ்சியுள்ளன.	செலவின மதிப்பீடுகள் கூடிய வரையில் சரியாகவும் உண்மைத்தன்மைக்கு இணங்கவும் தயாரிக்கப்படல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் கிடைத்த ஏற்பாடுகள் முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
02 செலவின விடயங்களுக்கு உரிய மொத்த ரூபா 1,116,785 ஆன பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 02 செலவின விடயங்களுக்குரிய ரூபா 76,306 கூட்டுத்தொகையான பொறுப்புக்களும் கடப்பாடுகளும் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் எல்லாப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும் சரியாகக் காட்டப்படல் வேண்டும்.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றதென பொறுப்புக் கூறல் உத்தியோகத்தர் சான்றளிக்க வேண்டும் என்பதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை குறித்துக் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க ஆக்கபூர்வமான வகையில் கொண்டு செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு, அந்த மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் எழுத்து மூலமான மீளாய்வின் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 ஆம் இலக்க 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைப் பேணவும் மீளாய்வு செய்யவும் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படுகின்றன என்பதற்குக் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோர் சான்றளிக்க வேண்டும் என்பதுடன், அத்துடன் கணக்காய்வு செய்யப்படும் தாபனத்துடன் தொடர்பான வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். இருப்பினும், அறிக்கையின் 4.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள்	இந்தத் தாமதமடைந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு இயலுமான உச்ச அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த தாமதமடைந்துள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் எழுத்து மூலமாகவும் வாய்மூலமாகவும் அறியப்படுத்தப்பட்டுள்ளது.	2018 ஆம் இலக்க 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த காலப்பகுதிக்குள் வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	காரணமாக அந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.		
(இ)	உள்ளகக் கணக்காய்வுக் பணியை முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதற்காக ஆக்கபூர்வமான ஒரு நடைமுறை உள்ளதெனப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோர் சான்றளிக்க வேண்டும் என்றபோதிலும், அறிக்கையின் 6.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்பிற்கு இணங்க அந்தத் தேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது.	2018 ஆம் இலக்க 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய உள்ளகக் கணக்காய்வாளர்களை நியமிக்கவும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்		**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின்			
(i)	நி.பி.104(3) மற்றும் (4)	மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 04 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக பூரண அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ஒரு வாகனத்தின் விபத்து ஏற்பட்டு 10 மாதங்கள் வரையில் கடந்திருந்த போதிலும் ஆரம்ப அறிக்கை கூடச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட அரசியல்	04 வாகனங்கள் சம்பந்தமாகப் பூரண அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக தற்போது உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.	வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களுக் கமைய குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

		நெருக்கடியின் போது அழிவடைந்த 04 வாகனங்கள் சம்பந்தமாக ஆரம்ப அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு சுமார் 05 மாதங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன், பூரண அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு நிதிப் பிரமாணங்களுக் கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும்.
	(ii) நி.பி. 110	அரசியல் நெருக்கடியின் போது சேதமடைந்த 02 வாகனங்கள் தொடர்பாக மொத்தம் ரூபா 53,290,469 ஆன சேதங்கள், சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் முறையான வகையில் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டைப் புதுப்பிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	எல்லாச் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக ஒரு பதிவேட்டைப் நாளதுவரையாக பேண வேண்டும்.
	(iii) நி.பி. 571(2) மற்றும் (3)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று மொத்த ரூபா 10,850,886 கூட்டுத்தொகையான 02 முதல் 05 வரையான வருடங்கள் பழமையான பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிதிப் பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	02 வருடங்களை விடப் பழமையான பொது வைப்புக்கள் மீதி தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக் கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும்.
(ஆ)	2021 மார்ச் 30 ஆந் திகதிய அமப/21/0458/313/015 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் II(ஆ) மற்றும் 2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 7.4 ஆம் பந்தி	2024 மே 02 ஆம் திகதியுடன் முடிவடைந்த அமைச்சின் கட்டிடத்தின் குத்தகை ஒப்பந்தம், திறைசேரியின் முன்னனுமதியின்றி 2025 பெப்ரவரி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 58,707,360 ஆன குத்தகை வாடகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.	நிரந்தரமான கட்டடமொன்றை அமைத்து அமைச்சுடன் இணைந்த சில நிறுவனங்களையும் அமைச்சையும் அதில் நிறுவுவதற்காக 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் வருடத்திலிருந்து குத்தகைக்காரருடன் இணக்கம் காணப்பட்ட ஒப்பந்தத்தின்படி குத்தகைப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.	ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கு முன்னர் திறைசேரியின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

(இ)	2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(I) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் இயந்திரங்கள் மூலம் வருகையையும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்தாமல், அமைச்சின் பதவியணிக்கு 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேர படிகளாக ரூபா 57,943,272 செலுத்தப்பட்டிருந்தது.	கௌரவ அமைச்சரின் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பாக பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் மற்றும் தாபனவிதிக் கோவையின் படி நடவடிக்கை எடுப்பதற்கு கௌரவ அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர் மூலம் தேவையான அறியப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைவிரல் அடையாளப் பதிவுகளைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	கைவிரல் அடையாளப் பதிவுகள் மூலம் வருகையையும் வெளியேற்றத்தை யும் உறுதிப்படுத்தியத ன் பின்னர் சம்பளம் மற்றும் மேலதிக நேரம் செலுத்தப்படல் வேண்டும்.

3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	அமைச்சின் கட்டிடத்தின் தரைத்தளத்தில் நிறுவப்பட்ட கடைகள் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.		
(அ)	2,178 சதுர அடிகளில் நிறுவப்பட்ட கடை, 2022 ஒத்தோபர் முதல் 2023 ஆகஸ்ட் வரையில் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திற்கும், 2023 ஆகஸ்ட் முதல் இன்று வரையில் உமந்தாவ கிரீன் ஹட் எனும் நிறுவனத்திற்கும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2022 ஆம் வருடத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிலுவைக் குத்தகைப் பணம், மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் மற்றும் நீர்க் கட்டணப் பட்டியல்கள் என்பவற்றுக்காக மொத்தம் ரூபா 6,226,669 அறவிடப்பட வேண்டியிருந்தது. சுமார் 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கழிந்திருந்த போதிலும், சம்பந்தப்பட்ட நிலுவைப் பணத்தை	தரை மாடியின் நிலுவை மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துமாறு தெரிவித்து இலங்கை சதொச நிறுவனத்தின் தலைவருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், தரை மாடியில் கடை அமைந்துள்ள பகுதிக்குரிய மின்சார மற்றும் நீர் மீட்டர்களைத் தனியாகப் பொருத்துமாறு கட்டடத்தின் முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவைப் பணங்களைத் துரிதமாக அறவிடவும், வெளித் தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் கட்டடங்களுக்காக நீர் மற்றும் மின்சார மீட்டர்களைத் தனித்தனியாகப் பொருத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	அறவிடுவதற்கு மற்றும் கடைக்கும் அமைச்சுக்கும் எனத் தனித்தனியாக நீர் மற்றும் மின்சார மீட்டர்களைப் பொருத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	மேற்குறிப்பிட்ட கடைக்கான உள்ளகக் கட்டிட நிர்மாண பணிகளுக்காக 146 பொருட்பதிவேட்டு பண்ட உருப்படிகள் (உறைசாதனப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், காசுப் பணப் பதிவேட்டு இயந்திரங்கள், இறாக்கைகள், கணனிகள்) கொள்வனவு செய்யப்படுகையில், முறையான பெறுகை நடைமுறையின்றி தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றிற்கு 2021 திசெம்பர் 29 ஆம் திகதி ரூபா 20 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அந்தப் பண்டங்கள் நிதிப் பிரமாணம் 751 இற்கிணங்க பொருட் பதிவேடுகளில் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன், கணக்காய்வுத் திகதியான 2025 சனவரி 16 ஆம் திகதி வரையில் அந்தப் பொருட்களில் ரூபா 3,293,800 பெறுமதியான 13 உருப்படிகள் காணாமற்போயிருந்தமை பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	வழங்குநர் நிறுவனத்தினால் பொருள் உருப்படிகளைக் கையளித்தது தொடர்பாக தகவல்களை வழங்குமாறு தெரிவித்து அந்த நிறுவனத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	பெறுகை நடைமுறைகளுக்கமைய முறையாகக் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். எல்லா பொருட்பதிவேட்டு உருப்படிகளும் நிதிப் பிரமாணங்களுக்கமைய பொருட் பதிவேடுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். காணாமற்போன உருப்படிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கமைய விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்படல் வேண்டும்.
(இ)	முறையான பெறுகை நடைமுறையின்றி மேற்குறிப்பிட்ட கடை மாதமொன்றுக்கு ரூபா 250,000 வீதம் 2023 செத்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நிலப்பரப்பிற்காக அமைச்சினால் மாதாந்தம் ரூபா 326,700 வாடகையை கட்டட உரிமையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்ததால், 2023 செத்தெம்பர் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,627,200 நட்டமேற்பட்டிருந்தது.	இந்தச் தொடர்பாக அமைச்சிடம் கோவைகள் இல்லாததுடன், சம்பந்தப்பட்ட விடயங்களை ஆய்வு செய்து எதிர்காலத்தில் போதுமான பதிலொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒப்பந்தங்களை மேற்கொள்ளுகையில் அரசுக்கு நட்டம் ஏற்படாதவாறு முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். அமைச்சிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுவதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) அமைச்சின் நோக்கங்களில் பின்வரும் பிரதான நோக்கங்கள் மீளாய்வாண்டிலும் பூர்த்தி செய்யத் தவறியுள்ளது.		
(i) தேசிய வர்த்தகக் கொள்கையொன்றைத் தயாரித்தல். (ii) அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்குரிய தரவு முறைமையைப் பேணுதல், அந்தத் தரவு முறைமையைப் புதுப்பித்தல் மற்றும் தரவுகளை வெளித் தகவல் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்துவதற்கான பொறிமுறையொன்றைத் தயாரித்தல். தேசிய புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக வழிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டவும் புலமைச் சொத்து கட்டமைப்பொன்றை நிறுவுதல். (iii) நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு அமைச்சுக்குக் கீழுள்ள நிறுவனங்களின் சட்ட நியமங்களை புதுப்பித்தல் மற்றும் திருத்தங்களை துரிதப்படுத்துதல்.	தேசிய வர்த்தகக் கொள்கையின் வரைபு தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அரசின் தற்போதைய தேசிய பொருளாதாரக் கொள்கைகளுடன் இணங்கச் செய்து மேலும் மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய புலமைச் சொத்துக்களை பாதுகாக்கும் நடைமுறையொன்று 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தாமதமின்றிப் பூர்த்தி செய்ய வேண்டும்.
(ஆ) 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம், 2003 இன் 36 ஆம் இலக்க தேசிய புலமைச் சொத்துச் சட்டம் மற்றும் 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திருத்தம் செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.		

4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்திக்கிணங்க எல்லாப் கணக்கீட்டு உத்தியோகத்தர்களாலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் நிறைவடைவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்றபோதிலும், அமைச்சின் கீழுள்ள 11 நிறுவனங்களில் 04 நிறுவனங்களின் 2022 ஆம் வருடத்திற்குரிய செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 07 நிறுவனங்களின் அறிக்கைகள் 04 மாதங்கள் முதல் 1 ½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதப்படுத்தப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும், 10 நிறுவனங்களின் 2023 ஆம் வருடத்திற்குரிய செயலாற்றல் அறிக்கைகள் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தாமதம் ஏற்பட்டுள்ள எல்லா நிறுவனங்களுக்கும் அறியப்படுத்தப்பட்டுள்ளது.	குறித்த திகதிக்கு முன்னர் வருடாந்தச் செயலாற்றல் அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான 21 வாகனங்களும் உள்ளடங்கலாக, 2025 மார்ச் 30 ஆம் திகதி வரையில் 32 ஆகக் காணப்பட்ட அமைச்சுப் பாவனைக்கு உட்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கைக்காக 02 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து அனுமதி	அமைச்சிடம் கையளிக்கப்படாத வாகனங்களில் சில அமைச்சுக்களும் திணைக்களங்களும் தற்போது செயற்பாட்டிலுள்ள நிலையில் காணப்படாதபடியால், அவற்றை அமைச்சின் பெயரில் கையளிப்பதற்காகக் கொம்ப்ரோலரிடம்	அமைச்சின் தேவைக்கு போதுமான வாகனங்களின் எண்ணிக்கையை மாத்திரம் வைத்துக் கொண்டு, வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை மீளக் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல்

	அளிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 07 மாத்திரமே ஆகும். அதற்கிணங்க, சுமார் 20 வாகனங்கள் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டன.	விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பில் தற்போதுள்ள 11 வாகனங்களில் 7 வாகனங்கள் இதற்கு முன்னர் இருந்த வர்த்தக அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் அந்த பதவியணிக்கு அனுமதி அளிக்கப்பட்ட வாகனங்கள் என்பதுடன், 2024 செத்தெம்பர் 21 ஆம் திகதிக்குப் பின்னர் வாகன அணிக்காக அனுமதி அளிக்கப்பட்ட வாகனங்களாகும். லங்கா சதொச நிறுவனத்திற்குத் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த வாகனம் மீண்டும் அணிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.	வேண்டும். தேவைக்கமைய சாரதிகளை ஈடுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	2022 ஆம் ஆண்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் சேதமடைந்த வாகனமொன்றை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக ரூபா 76,886,217 செலவாகும் எனச் சம்பந்தப்பட்ட கம்பனியால் அறிவித்திருந்த போதிலும், 2023 செத்தெம்பர் 20 ஆம் திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 24,000,000 பணம் போதுமானதாக காணப்படாமையால் கணக்காய்வுத் திகதி வரையில் சுமார் 2 ½ ஆண்டுகள் கழிந்திருந்த போதிலும், திருத்தங்கள் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாமல் காப்புறுதிப் பணம் பொது வைப்புக்கள் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன், வாகனம் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தினுள் நிறுத்தப்பட்டிருந்தது.	கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை.	வாகனத்தை திருத்தம் செய்து பாவனைக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் வ/ப அரச வர்த்தக (கூட்டுறவு) மொத்த விற்பனைக் கம்பனி (State Trading Co-operative Wholesale Company Ltd) எனும் அரச கம்பனி பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருந்த போதிலும், அமப/21/1313/313/045 மற்றும் 2021 ஆகஸ்ட் 02 ஆம் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க அந்தக் கம்பனியை மூடுவதற்கு அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த பரிந்துரை 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட கம்பனிக்காக பொது திறைசேரியால் வழங்கப்பட்ட பிணைமுறிகளுக்காக மக்கள் வங்கிக்கு 2013 மே 22 ஆம் திகதி செலுத்த வேண்டியிருந்த நிலுவைப் பணமான ரூபா 31,485,686 ஐத் தீர்த்தமை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.	2153/12 ஆம் இலக்க 2019 திசெம்பர் 10 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் இந்தக் அமைச்சு உள்நாட்டு வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சு எனும் பெயரில் நிறுவப்பட்டுள்ளதுடன், அதற்கு முந்திய தகவல்கள் அமைச்சில் காணப்படவில்லை.	தொடர்புடைய கம்பனியை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், கணக்காய்விற்காகத் தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
(ஆ)	2024 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட 2412/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய எல்லா விசேட பொருளாதார மத்திய நிலையங்களும் இந்த அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டிருந்ததுடன், பொருளாதார மத்திய நிலையங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.		

(i)	இரத்மலானை மற்றும் மீகொட விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள காணியின் சட்ட ரீதியான உரிமை சம்பந்தப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்திற்கு கையளிக்கப்படவில்லை.	தேவையான தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன், அந்தத் தகவல்கள் கிடைத்த பின் பதில்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	மத்திய நிலையம் அமைந்துள்ள காணியின் சட்ட ரீதியான உரிமையை மத்திய நிலையத்திற்குக் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ii)	இரத்மலானை, பிலியந்தல, நாராஹேன்பிட்டி மற்றும் மீகொட விசேட பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தங்களுக்கு முரணாக 128 கடைகள் உள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.	தேவையான தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன், அந்தத் தகவல்கள் கிடைத்த பின் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	ஒப்பந்தங்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், மத்திய நிலையங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்காக முறையானதொரு வழிமுறை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
(iii)	நாராஹேன்பிட்டி விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் 23 கடை அறைகளுக்கும் மற்றும் வேயங்கொடை பொருளாதார மத்திய நிலையத்தின் 63 கடை அறைகளுக்கும் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தங்கள் முறையே 2023 மே 31 ஆம் திகதியும் 2018 ஆம் வருடத்திலிருந்து முடிவடைந்திருந்த போதிலும், அறிக்கையின் திகதி வரையிலும் முறையான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை.	- மேற்படி -	ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர் முறையாக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(iv)	பிலியந்தல விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் 2022 முதல் 2024 ஆம் வருடம் வரையிலும், வேயங்கொடை பொருளாதார மத்திய நிலையத்தின் 2023 மற்றும் 2024 ஆம்	- மேற்படி -	குறித்த திகதியில் நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

	ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(v)	பொருளாதார மத்திய நிலையங்களின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முறையான வழிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	பதவிகளை அங்கீகரித்து அதற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முறையான வழிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
(vi)	மதிப்பீட்டு அறிக்கைகளுக்கமைய குத்தகை வாடகை செலுத்தாமையின் காரணமாக 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நாராஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் நிலுவைக் கடை வாடகைகள் மற்றும் தண்டப் பணமாக ரூபா 68,039,527 உம், நிலுவைக் களஞ்சிய வாடகையாக ரூபா 80,899,820 உம், இரத்மலானை பொருளாதார மத்திய நிலையத்தில் நிலுவைக் கடை வாடகை மற்றும் தண்டப் பணமாக ரூபா 2,088,623 உம் அறவிடப்பட வேண்டியிருந்தது.	- மேற்படி -	புதிய மதிப்பீட்டு அறிக்கைகளுக்கமைய குத்தகை வாடகையை அறவிடுவதற்காக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(vii)	ரூபா 21,072,873 தொகையான ஒப்பந்தப் பெறுமதியின் அடிப்படையில் தம்புள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வங்கித் தொகுதிக் கட்டட நிர்மாணச் செயற்திட்டத்தின் ரூபா 5,132,543 கூட்டுத்தாகையான மிகுதி பணிகளுக்கும் (Excess work) மற்றும் ரூபா 1,873,917 ஆன மொத்த மேலதிக புணிகளுக்கும் (Extra work) என ரூபா 7,006,460 ஆன மொத்த ஒப்பந்த மாற்றங்களுக்காக	மாத்தளை மாவட்டப் பொறியியலாளர் மற்றும் தம்புள்ள பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் இது தொடர்பாகப் பரிசோதித்து ஓர் அறிக்கை வழங்கப்பட்டதன் பின்னர் பதில்கள் சமர்ப்பிக்கப்படும்.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒப்பந்த மாற்றங்களுக்காக அனுமதி பெறுவதற்கும் பெறுகை வழிகாட்டல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொண்டு மொத்தச் செலவு மதிப்பீட்டைத் திருத்தம் செய்வதற்கு இவ்வாறான சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	மாற்ற ஆணைப் படிவத்தைப் பாவித்து முறையாக அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த மாற்றங்களின் பெறுமதி ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் சுமார் 33 சதவீதமாகக் காணப்பட்டமையால் மொத்தச் செலவு மதிப்பீட்டைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(viii)	தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த ஆண்டுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக் குத்தகைப் பணம், தண்டப் பணம் மற்றும் வாகனங்களுக்கான அனுமதிச்சீட்டு வழங்கல் கட்டணங்களில் முறையே ரூபா 1,027,978, ரூபா 7,700,611 மற்றும் ரூபா 500,000 ஆக மொத்தம் ரூபா 9,228,589 ஆன பணம் மீளாய்வாண்டில் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிறுவியவரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.	நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 8(அ) ஆம் பந்திக்கிணங்க பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	போதுமான கணக்கு மீதிகள் பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளதால் நிறுவியவரின் அனுமதி பெறப்படல் வேண்டும்.
(ix)	தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்குச் சொந்தமான 157 கடை அறைகளில் 126 வர்த்தக அலகுகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாமல் 05 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.	அமைச்சினால் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்படாமையின் காரணமாக குத்தகை ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், குத்தகை ஒப்பந்தங்களை வழங்குவது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	அனைத்து கடை அறைகளுக்கும் முறையாகக் குத்தகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(x)	தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்குச் சொந்தமான 157 வர்த்தக அலகுகள் தொடர்பாக	துரிதமாக புதிய மதிப்பீடுகளை உள்ளடக்கி குத்தகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு	மதிப்பீடு செய்து மதிப்பீட்டுக் குத்தகையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன்,

	அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டுக் குத்தகையை விடக் குறைந்த மாதாந்தக் குத்தகையை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அறவிட்டமையின் காரணமாக 2023 ஆம் வருடம் முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 59,359,624 தொகையான நட்டம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. மதிப்பீட்டுக் குத்தகையை அறவிடுவதற்கு 2017 சனவரி 24 ஆம் திகதியிட்ட பொறுப்புக் கூற்றில் 8 ஆம் பந்தியின் (அ) அதிகாரத்திற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கைகளின் செல்லுபடியான காலப்பகுதியான 3 ஆண்டுகள் கடந்து சுமார் 03 மாதங்கள் அண்மித்த காலம் கழிந்திருந்த போதிலும், 2025 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கவனம் செலுத்தப்படுகின்றது. மீள் மதிப்பீடு செய்வது தொடர்பாக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது.	நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு நட்டம் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(xi)	தரமானதும், வீண்விரயமற்றதுமான மரக்கறி மற்றும் பழ உற்பத்தியை ஏற்படுத்தி தொடர்ச்சியாக விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது மற்றும் விவசாயிகளின் உற்பத்திக்கு மிகவும் நியாயமானதும் கவர்ச்சிகரமானதுமான விலையொன்றை வழங்குவது தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் பணிக்கூற்று ஆகும். எவ்வாறான	விவசாய உற்பத்திகளின் விலை சந்தையின் கேள்விக்கும் நிரம்பலுக்கும் ஏற்பவே தீர்மானிக்கப்படுவதால், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு முகாமைத்துவப் பொறுப்பு நிதியத்திற்கு இயலுமை இல்லை.	மத்திய நிலையத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் பணிகள் திட்டமிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	போதிலும், மத்திய நிலையம் நிறுவப்பட்டு 26 ஆண்டுகள் கடந்திருந்தும் விளைச்சலைப் பாதுகாப்பதற்கு, விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தீர்மானிக்கப்பட்ட விலையைப் பிரசுரிப்பதற்கு எந்தவொரு வேலைத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.		
(xii)	தம்புள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் 2024 ஆம் வருடத்தின் செயற்பாட்டுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருந்த 07 செயற்பாடுகளில் 06 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவது கைவிடப்பட்டிருந்தது. இதன்போது 2022 ஆம் வருடத்தினுள் அளவையியல் திட்டங்களைத் தயாரிப்பதற்காக ரூபா 510,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், நடைமுறைப்படுத்துவது கைவிடப்பட்டமையால் அச்செலவு பிரயோசனமாகியிருந்தது.	மாத்தளை மாவட்டப் பொறியியலாளர் மற்றும் தம்புள்ள பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் இது தொடர்பாகப் பரிசோதித்து ஓர் அறிக்கை வழங்கியதன் பின்னர் பதில்கள் சமர்ப்பிக்கப்படும்.	செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும்போது நடைமுறைச் சூழ்நிலைகள் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், தயாரிக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
(xiii)	தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் 2016 ஆகஸ்ட் 09 ஆம் திகதியிடப்பட்ட அடுத்த 02 ஆண்டுகளுக்குச் செல்லுபடியான மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் 2023 திசெம்பர் வரையிலும் கடை வாடகைகள் அறவிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க, கடை அறைகள் இரண்டு ஆண்டுகளின் பின்னர் மீள்	பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீட்டின் செல்லுபடியான காலம் நிறைவடைவதற்கு முன்னர் கடை அறைகளை மீள் மதிப்பீடு செய்வதற்கும் புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் ஆடிப்படையில் வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக 05 ஆண்டுகளுக்கான புதிய மதிப்பீட்டுக் குத்தகையில் கிடைக்கப் பெற்றிருக்கக்கூடிய கடை வாடகைக் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.		
(xiv)	தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் கழிவுகளை அகற்றுவதற்காக, தம்புத்தேகம பிரிவின் ஒருகலையாவிலிருந்து 05.07 ஏக்கர் காணிப் பகுதியை இலங்கை மகாவலி அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு 2020 செத்தெம்பர் 16 ஆம் திகதி அனுமதி கிடைத்திருந்த போதிலும், 2025 மார்ச் 05 ஆம் திகதி வரையிலும் அந்தக் காணி சட்ட ரீதியாகப் பொறுப்பேறகப்பட்டு சம்பந்தப்பட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில் லை. இதன்போது நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக குத்தகை வாடகைப் பணங்களை 2020 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரையில் முறையாகச் செலுத்தாமையின் காரணமாக தண்டப் பணமாக ரூபா 40,000 உம், அதற்காக வட்டியாக ரூபா 10,000 உம் இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	காணியைச் சட்ட ரீதியாகப் பொறுப்பேற்று நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். குத்தகை வாடகைப் பணங்களை குறித்த திகதியில் செலுத்தாமையின் காரணமாகச் செலுத்த வேண்டியேற்பட்ட தண்டப் பணத்தை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்காகப் பொருத்தமான வகையில் ஒரு விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
(xv)	தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்காக மலம் கழிவு சுத்திகரிப்பு இயந்திரமொன்றை நிறுவுவதற்கும் கழிப்பறை முறைமையைப்	பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	அனுமதிக்கப்பட்ட ஆக்கபூர்வமான திட்டங்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	புனரமைப்பதற்கும் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி ரூபா 9,195,162 விவசாய இராஜாங்க அமைச்சினால் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், சம்பந்தப்பட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. மத்திய நிலையத்தின் மலக் கழிவுகளை அகற்றுவதற்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,218,500 செலவிடப்பட்டிருந்ததுடன், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமையின் காரணமாக வருடமொன்றிற்கு இவ்வாறாக பாரிய செலவினச் சுமையைச் சுமக்க நேரிட்டிருந்தது.		
(xvi)	எம்பிலிப்பிட்டிய விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்குச் சொந்தமான 45 கடை அறைகளைக் குத்தகைக்கு வழங்குகையில் முறையான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 40 குத்தகைதாரர்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலுத்தத் தவறியிருந்த ரூபா 3,699,797 குத்தகை பணத்தை அறவிடுவதற்குக் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பொருளாதார மத்திய நிலையம் 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும்போது கடை குத்தகைதாரர்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையின் காரணமாக சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்குச் செல்ல இயலாமற் போயிருந்ததுடன், அவ்வப்போது எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் நிலுவைப் பணத்தைச் செலுத்த குத்தகைதாரர்களுக்கு அறியப்படுத்தப்பட்டது.	குத்தகைதாரர்களுடன் முறையாகக் குத்தகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நிலுவைப் பணத்தை அறவிடுவதற்குக் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(xvii)	எம்பிலிப்பிட்டிய விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்குச் சொந்தமான கடை அறைகள் தொடர்பாக 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகக்கூடிய 2016 ஆம் ஆண்டில்	ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. புதிய மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலமும், பிரதான வீதியை நோக்கியுள்ள 15 கடை அறைகளை மதிப்பீடு	குத்தகைச் சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குகையில் மதிப்பீடு செய்து அந்தப் பெறுமதிகளில் குத்தகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, 09 ஆண்டுகள் கடை அறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததால், அந்தக் குத்தகைச் சொத்துக்களுக்குரிய தற்கால குத்தகை பெறுமதிகளின் ஆடிப்படையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	செய்வதற்காக 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.	
(xviii)	கெப்பெட்டிப்பொல விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் 2022 ஆம் வருடத்தின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க முகாமைத்துவ நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் ரூபா 194.6 மில்லியன் நிதி செலவில் பொருளாதார மத்திய நிலையத்தை மூடும் வகையில் கூரையொன்றை நிர்மாணிப்பதற்கான நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த செயற்திட்டம் 2024 திசெம்பர் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கொள்வனவு நடவடிக்கைகளுக்காக 2024 மே 30 ஆம் திகதி பதுளை மாவட்டச் செயலாளருக்கு ரூபா 500,000 வழங்கப்பட்டிருந்ததுடன், பத்திரிகை விளம்பரத்திற்காக ரூபா 256,565 செலவிடப்பட்டிருந்தது.	வர்த்தக அமைச்சினால் இந்த விடயம் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.	திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். .

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	உணவுத் தட்டுப்பாடு ஏற்படாதவாறு உணவு இருப்புகளைப் பேணும் நோக்கில் 03 இலக்குகளின் கீழ் தம்புள்ள களஞ்சியத் தொகுதியை அமைத்தலின் மொத்த பௌதீக முன்னேற்றம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று 75 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை உள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மரக்கறி மற்றும் பழங்களைச் சேமித்து வைத்திருக்கக்கூடிய குளிரூட்டப்பட்ட களஞ்சியத் தொகுதியை அமைத்தலும் செயற்பாட்டுச் செயல்முறையும் அதன் வெற்றிக் குறியீடாகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டுக் காலப்பகுதியைக் கடந்து 3 ½ ஆண்டுகள் கழிந்து நிர்மாண புணிகள் நிறைவடைந்திருந்த போதிலும், அதன் செயற்பாட்டுச் செயல்முறை 2025 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தேவையான தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன், அந்தத் தகவல்கள் கிடைத்த பின் பதில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	மரக்கறி மற்றும் பழங்களைச் சேமித்து வைத்திருக்கக்கூடிய குளிரூட்டப்பட்ட களஞ்சியத் தொகுதியின் செயற்பாட்டுச் செயல்முறையைத் துரிதமாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான முன்னேற்றத்தைச் சரியாகக் காட்ட வேண்டும்.
(ஆ)	உணவுத் தட்டுப்பாடு ஏற்படாதவாறு உணவுப் பாதுகாப்பு இருப்புக்களைப் பேணுவதன் கீழ் மேலதிக அரிசி இருப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அது தொடர்பாக உள்ளூர் மட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாதுகாப்பு இருப்புக்களைப் பேணுவதற்கு முறையானதொரு வழிமுறையை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தேவையான தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன், அந்தத் தகவல்கள் கிடைத்த பின் பதில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	உணவு இருப்புகளைப் பேணுவதற்கான முறையான வழிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. நல்லாளுகை

6.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த் கருத்துரை	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம், அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அமைச்சுக்காக ஓர் உள்ளகக் கணக்காய்வாளரும் அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் அதன் கட்டுப்பாட்டுக் குழுவினால் உள்ளகக் கணக்காய்வாளர்களும் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2025 சனவரி 31 ஆம் திகதி வரையில் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் திணைக்களங்கள் மற்றும் 07 அரச வியாபார நிறுவனங்களில் 01 வருடம் முதல் 06 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. மேலும், உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் வணிகத் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களிலும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகள் நிறுவப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வாளர் பதவி நிறுவப்படாத நிறுவனங்களில் அந்தப் பதவியை நிறுவவும் அமைச்சிலும் அதன் கீழுள்ள எல்லா நிறுவனங்களிலும் உள்ளகக் கணக்காய்வு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.